**தேயிலை சக்தி நிதியம் - 2017**

---

தேயிலை சக்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 2000 இன் 47 இலக்க தேயிலை சக்தி நிதியத்தின் சட்டத்தினதும் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை நான் வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்காக அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயமொன்றினை நான் வெளியிடப்படுத்துகின்றறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை நிதியத்தின்ால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு 1998 ஆண்டு முதல் 2004 ஆண்டு வரை தேயிலை தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்காக ரூபா 437,505,030 இற்கான திறைசேரி மானியம் கிடைத்திருந்த போதிலும், அந்த மானியத்தை நிலையான சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காக பயன்படுத்திய முறை தொடர்பாக அறுதியாக இனங்காணாமல் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 12 பந்திக்கு இணங்க இணக்கமின்றி 2012 ஆண்டு முதல் 10 வருடங்களில் காலக் கழிவு மேற்கொள்ளும் அடிப்படையில் ஆண்டிற்கு ரூபா 43,750,503 தொகை வீதம் காலக் கழிவு கணித்து கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், திறைசேரி மானியம் எந்தச் சொத்துக்கள் | தேயிலை சக்தி நிதியத்தின் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலை அலுவல்கள் 2000, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், திறைசேரியினால் வழங்கியிருந்த ரூபா 437.5 மில்லியன் ஏற்பாடுகள் எந்தச் சொத்துக்கள் கொள்வனவிற்காக / நிர்மாணிப்பதற்கு அல்லது நவீனமயப்படுப்பதற்காக பயன்படுத்தப்பட்டது போன்ற அறிக்கைகள் தற்போது தேயிலை சக்தி நிதியத்தில் காணப்படவில்லை. | திறைசேரி மானியம் நிலையான சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பாக அறுதியாக இனங்கண்டு சொத்துக்களை ஆவணப்படுத்தி கணக்கீடு செய்து காலக் கழிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவிற்காக / நிர்மாணிப்பதற்காக / நவீனமயப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது, அந்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் எந்த ஆண்டு முதல் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டது போன்று சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மேற்கூறிய நியமத்தின் ஏற்பாடுகளின் படி பெறுமானத் தேய்வு விகிதாசாரத்திற்கு இணக்கமின்றி காலக் கழிவு சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது தொடர்பாக மீளாய்வாண்டின் கணக்குகளில் வெளிப்படுத்துதல் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன்படி, ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிற்போடப்பட்ட வருமானம் என இனங்கண்டிருந்த ரூபா 43,750,503 இற்கான பெறுமதியின் உண்மைத் தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2018 ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கைகள் மூலம் குறிப்பிட்ட சரிசெய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | காலக் கழிவு சீராக்கல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 97 ஆம் பந்தி மற்றும் கணக்கீட்டுக் குறிப்பு இலக்கம் 2.5 இற்கு இணங்க அருவச் சொத்துக்கள் பயன்படுத்துவதற்காக தயார் நிலையை அடைந்தவுடன், அந்த அருவச் சொத்தின் காலக் கழிவு மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2010 ஆண்டின் போது ரூபா 2,600,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணினி மற்றும் மென்பொருள் நிறுவப்பட்டு மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இது வரை காலக் கழிவு மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட மென்பொருள் அனைத்து தொழிற்சாலைகளையும் ஒன்றினைத்து செயற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட போது, சில தொழிற்சாலைகள் அதனுள் இணைப்பதற்கு முடியாமல் இருந்ததால் பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. தேயிலை சக்தி நிதியம் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட மென்பொருளை பௌதீக ரீதியாக ஒப்பத்திருக்காததுடன், இது தொடர்பாக மேலும் ஆய்வு மேற்கொண்டு எதிர் காலத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படவுள்ளது. | கணினி மற்றும் மென்பொருள் நிறுவப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காலக் கழிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பயிர் செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,125,702 இற்கான முதிர்வடைந்த தேயிலைக் கன்றுகள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முதிர்வடையாத தேயிலைக் கன்றுகள் என கணக்கீடு | 2018 ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கைகள் மூலம் குறிப்பிட்ட சரிசெய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தேயிலைக் கன்றுகள் முதிர்வடைவதை இனங்காணக்கூடியவாறு ஆவணங்கள் பேணப்பட்டு அதன்படி, சொத்துக்களை இனங்கண்டு குறிப்பிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | செய்தமையால் நிதியத்தின் முதிர்வடைந்த தேயிலை பயிர்ச் செய்கையின் பெறுமதி ரூபா 5,125,702 இனால் மற்றும் காலக் கழிவு பெறுமதியும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2008/2009 மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக செலுத்தியிருந்த ரூபா 2,790,822 இற்கான பொருளாதார சேவைக் கட்டணம், வருமான வரிக்கு பதிலீடு செய்யக்கூடிய 03 வருட காலத்தை மிகைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்த பெறுமதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிவுரையை பெற்றுக்கொண்டு 2018 ஆண்டு கணக்கறிக்கையின் மூலம் குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொருளாதார சேவைக் கட்டண வருமானம் சரியான இனங்கண்டு கணக்குகள் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2008 ஆண்டிற்கு முன்னர் இந்த நிதியத்திற்கு சொந்தமான தொழிற்சாலைகளுக்காக நிதியத்தினால் நிருவகிக்கப்படுகின்ற நலனோம்பு காப்புறுதி நிதியத்திலிருந்து கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடனை கணக்கீடு செய்யாமல் கடனுக்காக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 61,143,439 இற்கான வட்டியை மாத்திரம் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிதியத்திலிருந்து வழங்கியிருந்த கடன் மற்றும் வட்டி தொடர்பான விரிவான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த இறுதிக் கணக்கறிக்கைகளில் தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதியத்தின் மூலம் வழங்கியிருந்த கடன்களை கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் நடைமுறை அல்லாத சொத்துக்களில் அடங்கியுள்ள ரூபா 259,889,359 தொகை பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதன் பெறுமானத் தேய்வுச் செலவு தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் ரூபா 974,291 இற்கான தொங்கல் மீதியொன்று அடங்கியிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | தொங்கல் மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதியத்திற்கு சொந்தமான உள்நாட்டு தேயிலை விற்பனை நிலையமொன்று தொடர்பாக ரூபா 448,909 இற்கான வங்கி மேலதிகப் பற்றொன்று ஐந்து வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நடைமுறைச் பொறுப்புக்கள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், பேரேட்டில் மற்றும் வங்கிக் கூற்றில் அந்தப் பெறுமதி அடங்கியிருக்கவில்லை. | தேயிலை சக்தி நிதியம் அமைச்சுக்கு உரித்தாக்கிய பின்னர் குறிப்பிட்ட சரி செய்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், காணப்படுகின்ற தகவல்கள் போதியளவாக காணப்படாமையால் அதனை மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு உண்மையான வங்கி மேலதிக பற்று மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நிதியத்திற்கு சொந்தமாக காணப்படாத 37 வாகனங்கள் 2016 ஆண்டு முதல் நிதியத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டு 2005 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 20,441,551 தொகை பெறுமானத் தேய்வு ஒதுக்கம் என கணக்கீடு செய்திருந்தமையால் தடுத்து வைக்கப்பட்ட உழைப்பில் வரவு மீதி ரூபா 20,441,551 இனால் மிகைக் கணிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆண்டு கணக்கீட்டு அறிக்கையின் மூலம் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்திற்கு சொந்தமில்லாத வாகனங்கள் மற்றும் அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு பதிவேடுகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 7,902,517 இற்கான நிலுவை தேயிலை இருப்பு தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் நட்டத்தை அறவீடு செய்தவற்கு அல்லது நிதிச் செயலாற்றல் கூற்றில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் 2.2.3 இற்கு இணங்க நிலுவை தேயிலை இருப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை சக்தி நிதியத்தின் தலையீட்டுடன் தேயிலை சிறுபற்று சங்கங்களுக்கு தொழிற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த 13 வாகனங்களுக்காக தொழிற்பாட்டுக் குத்தகை தவணைகள் என 2001 மற்றும் 2002 ஆண்டுகளின் போது ரூபா 2,691,326 தொகை தேயிலை சக்தி நிதியத்திலிருந்து செலுத்தியிருந்ததுடன், அதனை பெற வேண்டிய மீதியொன்றென 15 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டதுடன், அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதிகள் தொடர்பாக மேலும் உறுதிப்படுத்திய பின்னர் எதிர்காலத்தில் தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு தேவையான ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு தொழிற்பாட்டுக் குத்தகை தவணைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2006, 2007 காலப் பகுதியில் தேயிலை விற்பனையின் மூலம் தனியார் கம்பனி ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,744,732 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்காததுடன், 10 வருடங்களை மிகைத்திருந்த இந்த பெற வேண்டிய மீதிகளை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் குறிப்பிட்ட ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட கம்பனிக்கு எதிராக தேயிலை சக்தி நிதியத்தினால் கொழும்பு வாணிப நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு தேயிலை சக்தி நிதியத்திற்கு அனுகூலமான தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட கம்பனியினால் அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த மேல் முறையீட்டுக்குரிய வழக்குத் தீர்ப்பு 2025 ஆண்டு ஜனவரி மாதத்தில் வழங்கப்படவுள்ளது. | கடன் பட்டோர் மீதிகளை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 280,646,358 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள், விரிவான அட்டவணை மற்றும் காலப் பகுப்பாய்வு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 233,794,136 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள், விரிவான அட்டவணை மற்றும் காலப் பகுப்பாய்வு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டுக்கு முன்னர் இருந்து நிதியத்தின் உள்நாட்டு தேயிலை விற்பனை நிலையங்களுக்கு தொழிற்சாலைகளினால் வழங்கப்பட்டிருந்த முடிவுற்ற தேயிலைக்காக பெற வேண்டிய ரூபா 23,523,059 தொகை வர்த்தக பெற வேண்டியவைகள் என நிதியத்தின் நடைமுறைச் சொத்துக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதிகள் தொடர்பாக காணப்படுகின்ற தகவல்களின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் என உட்படுத்தப்பட வேண்டிய ரூபா 97,962,620 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | பெற வேண்டிய கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 2,957,414 இற்கான பலவின கடன் கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்த கடன் கொடுத்தோரை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | கடன் கொடுத்தோர் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டிற்கு முன்னர் முதல் நிதியத்தின் உள்நாட்டு தேயிலை விற்பனை நிலையங்களுக்கு தொழிற்சாலைகளினால் வழங்கியிருந்த முடிவுற்ற தேயிலைகளுக்காக ரூபா 11,843,044 தொகை வர்த்தகக் கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் என நிதியத்தின் நடைமுறைப் பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அவற்றை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதிகள் தொடர்பாக காணப்படுகின்ற தகவல்களின் படி தொடர் நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஆண்டு முதல் நிதி நிலைமைக்கூற்றில் அடங்கியிருந்த முறையே ரூபா 42,975,468 இற்கான மற்றும் ரூபா 11,814,857 இற்கான மானியத்துடனான / மானியமின்றிய உர செலவுகள் மற்றும் முகவர் கட்டணம் / டென்டர் கட்டணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்துக்கொள்ளப்படாமல் செலுத்தப்பட வேண்டிய ஏனையவைகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்காததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2024 பெப்ரவரி 27 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2024 ஒக்தோபர் மாதம் அளவில் 2017 ஆண்டின் வரைபு வருடாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலைமை எதிர் காலத்தில் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது . | நிதிக்கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 184,465,904 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 30,529,438 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 214,995,342 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனைக் கிரயம் ரூபா 140,001,418 இனால் குறைவடைதல் நிர்வாகச் செலவு மற்றும் வட்டிச் செலவு முறையே ரூபா 144,345,186 இனால் மற்றும் ரூபா 2,343,609 தொகையினால் குறைவடைதல் மற்றும் வட்டி வருமானம் ரூபா 597,967 இனால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலை சக்தி நிதியத்தின் யடினுவர, பொதுபிடிய மற்றும் புலத்கொகுபிடிய தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2001 ஆண்டின் போது ரூபா 28,311,751 இற்கான முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டு 15 | சில தொழிற்சாலைகளில் பகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அப்போது தேயிலை சக்தி நிதியத்திற்காக அரசின் கீழ் வழங்குவதற்கு இணங்கியிருந்த குறிப்பிட்ட தொகை கிடைக்கப் | வழங்கியிருந்த முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு அல்லது பௌதீக முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அதன் செயற்திறன் |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த கருமங்களை பூர்த்தி செய்திருக்காததுடன், வழங்கியிருந்த முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு அல்லது போதியளவு ஏற்பாட்டுத் தொகையொன்றை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறாமையால் அந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததுடன் இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்து தீர்மானிக்கப்படவுள்ளது. | தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தை மீள்கட்டமைத்தல் தொடர்பான 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-I இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்காக நிதியமைச்சரின் அவதானிப்புக்களில் காட்டப்பட்டிருந்தவாறு தலைமை அலுவலகத்தின் நிரந்தர பதவியணி, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக இணைத்தல் மற்றும் வெற்றிடங்கள் காணப்படாவிடின் மிகை ஊழியர் அடிப்படையின் மீது அவர்களுக்கு விஷேடம் என்ற முறையில் அந்த நிறுவனங்களில் இணைக்க வேண்டியிருந்த போதிலும், 06 அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த 17 தேயிலை சக்தி ஊழியர்களுக்காக சம்பளமாக ரூபா 6,936,224 தொகை அமைச்சரவை தீர்மானத்தின் பின்னரும் நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், செலுத்தப்பட்ட தொகையினை மீண்டும் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக வெளித்தரப்பினர் ஒருவரினால் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், தேயிலை சக்தி நிதியத்தினால் மாவட்ட நீதி மன்றங்களில் 06 வழக்குகள் மற்றும் இரண்டு காணி வழக்குகளும் மேன்முறையீட்டு நீதிமன்றில் இரண்டு வழக்குகளில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான காணிகள் வெளித் தரப்பினரினால் அனுபவிப்பதற்கு எதிராக தேயிலை சக்தி நிதியத்தினால் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | தற்போது காணப்படும் வழக்குகளின் அலுவல்களை தாமதம் இன்றி தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2002 / 2003 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 4,545,276 இற்கான தடுத்து வைத்தல் வரி மீளாய்வாண்டு இறுதியளவிலும் செலுத்துவதற்கு அல்லது | இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விடயங்களை விசாரணை செய்து தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் நிலுவை தடுத்து வைத்தல் வரியை |

| | | | |
|---|---|---|---|
| | உரிய முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதியத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஹொரண உரக் களஞ்சியம் மற்றும் ரைகம்கோரளை தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளின் உரிமை தற்போது உரிய பிரதேச செயலகங்களின் கீழும், எல்பிடிய, ஹினிதும மற்றும் பஸ்ஸர ஆகிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் காணப்படுகின்ற போதிலும், காணிகளின் உரிமையை சட்டரீதியாக நிதியத்திற்கு உரித்தாக்காமல் ரூபா 81,036,209 தொகை பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | தற்போது இந்தக் காணிகளை தேயிலை சக்தி நிதியத்திற்கு சட்ட ரீதியாக உரித்தாக்குவதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | வாகனங்களை அப்புறப்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய பணத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்திற்கு சொந்தமான 04 வாகனங்களை அப்புறப்படுத்தியதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 4,771,822 தொகை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளருக்குப் பதிலாக பிரதான கணக்காளரின் 2016 ஜூலை மாதம் MPI/ACC/F14/T5F இலக்கம் கொண்ட கடிதத்திற்கு இணங்க தேயிலை சக்தி நிதியத்தினால் தென்னை பயிர் செய்கை சபையிலிருந்த பெற்றிருந்த கடன் தொகையை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தேயிலை சக்தி நிதியம் 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதியச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டிருந்த அரை அரசு நிறுவனம் ஒன்றாக காணப்படுவதனால் நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை விற்பனை செய்யும் அதிகாரம் மற்றும் வருமானத்தை பயன்படுத்தும் அதிகாரம் அதன் பணிப்பாளர் சபைக்கு உரித்தாகின்றது. அதன்படி நடவடிக்கை எடுத்துள்ளதுடன், குறிப்பிட்ட நிகழ்வு தேயிலை சக்தி நிதியத்தை மீள்கட்டமைப்பதற்கு முன்னர் ஏற்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் ஒன்றாகும். | அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க சொத்துக்களை அப்புறப்படுத்துவதன் மூலம் கிடைக்கூடிய அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-I மற்றும் 2016 ஆகஸ்ட் 17 திகதிய அமப/16/1427/726/015-II இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் அலுவல்கள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டு நிதியத்தை மீள் கட்டமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த பின்னர் தெனியாய, கிளிமலை, ரைகம்கோரளை மற்றும் தெரனியகல ஆகிய தேயிலைத் தொழிற்சாலைகள் | மாதாந்த கொழுந்து விலையில் மாற்றமடைதல் குறிப்பிட்ட பெறுமதி மாற்றமடைதல் மற்றும் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் போது பாரிய ஆரம்ப மூலதனம் ஒன்று ஈடுபடுத்த நேரிடுதல் ஆகிய விடயங்கள் காரணமாக குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் செய்முறை சார் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர் காலத்தில் கையொப்பமிடுகின்ற உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் உட்படுத்துவது தொடர்பாக மீண்டும் மீளாய்வு | குத்தகைதாரர்களிடம் வங்கிப் பிணைமுறி அல்லது காப்பீடு பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை அடிப்படையில் வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அணுகியிருந்த குத்தகை உடன்படிக்கைகளின் 07 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதனங்களை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட தரப்பினரால் மாதாந்த கொழுந்து கொள்திறனுக்கு ஏற்ற பெறுமதிக்கு தேயிலை சக்தி நிதியத்தின் பெயரில் வங்கிப் பிணைமுறி அல்லது காப்புறுதி காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியம் மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவிலும் குத்தகையாளரிடம் வங்கிப் பிணைமுறி அல்லது காப்பீடு பாதுகாப்பு பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான ஹனிதும தேயிலை தொழிற்சாலையின் முகாமைத்துவம் கலுபோவிடியான தேயிலை தொழிற்சாலைக்கு வழங்கப்படும் போது தொழிற்சாலை இலாபத்தின் 1/3 தொகை தேயிலை சக்தி நிதியத்திற்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், தொழிற்சாலையின் நட்ட நிலைமை காரணமாக அந்தப் பகுதி தேயிலை சக்தி நிலையத்திற்கு வழங்கியிருக்காத போதிலும், நிலையத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக்கு சமமான பெறுமதியொன்று அதாவது ரூபா 1,661,828 தொகை வர்த்தக பெற வேண்டியவைகள் என 2015 ஆண்டு முதல் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | ஹினிதும தொழிற்சாலை நட்ட நிலைமையில் காணப்பட்டதால் 1/3 இலாபப் பங்கு தேயிலை சக்தி நிதியத்திற்கு கலுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனியினால் செலுத்தியிருக்காததுடன், குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சொந்தமான தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி பெற வேண்டியவைகள் என காட்டப்பட்டிருந்தது. | 2019 மார்ச் 19 திகதிய அமப/19/0743/117/024 இலக்கம் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க ஹினிதும தேயிலைத் தொழிற்சாலையின் உரிமை நட்டரீதியாக கலுபோவிடியான தேயிலை தொழிற்சாலைக்கு உரித்தாக்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் வாணிப பெற வேண்டியவைகள் என கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி தொடர்பாக நடைமுறை நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |